# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 29 திங்கட்கிழமை 14 09 1992 UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 291

# துணிவு, விடாமுயற்சி, தளராஉறுதி ராணுவ வெற்றிகளுக்குக் காரணம்

## விசேட பரிசளிப்பு விழாவில் தலைவர் பிரபா விளக்கம்

யாழ்ப்பாணம், செப்டம்பர் 14

"எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் மகத்தான சாதனைகளைப் புரிந்திருக்கிறோம்; மாபெரும் வெற்றிகளை ஈட்டியிருக்கிறோம்; உலகமே வியக்கும் வகையில் வீர காவியங்களைப் படைத்திருக்கிறோம். எமது போராளிகளின் அபாரமான துணிவும், விடாமுயற்சியும், தளராத உறுதியுமே இந்த வெற்றிகளுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. எதற்கும் துணிந்தால், விடாது முயற்சிகளை எடுத்தால், உறுதியோடு இயங்கினால் எந்த சாதனையையும் சாதித்துவிடலாம். எமது இயக்கத்தின் இராணுவ வெற்றிகள் இந்த உண்மையையே எடுத்தியம்புகின்றன."

இவ்வாறு தலைவர் பிரபாகரன் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட பரிசளிப்பு விழாவில் பேசும்பொழுது எடுத்துரைத்தார்

சென்ற மாதம் 8 ஆம் திகதி தீவகப் பகுதியில் — அராலிச் சந்திக்கு அண்மையில் — விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலை வெற்றிகரமாக நடத்திய போராளிகளுக்கு தலைவர் பரிசில்களை வழங்கினார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)



## தியாகி திலீபன் நினைவாக நாளை முதல் நிகழ்ச்சிகள்.

யாழ்ப்பாணம். செப் 14

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவை முன்னிட்டு நாளை 15 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை தமிழீழம் எங்கும் நினைவு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் கோட்ட வட்டத்திலும், வட்ட மட்டத்திலும் நினைவு நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக இடம்பெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளரின் ஒழுங்குமுறை அமைப்பின் கீழ் மக்களால் இந்த நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

இந்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி விளக்கமளித்தார்.

நாளை முதல் 25 ஆம் திகதி வரை — தினசரி — வட்டரீதியாக பன்னிரண்டு இடங்க

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் தமிழீழம் அமைவதை இந்தியா அங்கீகரிக்க வேண்டும்

### பாட்டாளி மக்கள் கட்சி மாநாட்டில் தீர்மானம்

லண்டன், செப்டம்பர் 14

"இலங்கையில் தமிழீழம் அமைவதை இந்திய அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்."

— இவ்வாறு கோரும் தீர்மானம் சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

பட்டாளி மக்கள் கட்சி கடந்த வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்களும் நடத்திய மாநாட்டின் முடிவில் இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவில் தமிழர்கள் உட்பட எல்லா இனத்தவர்களுக்கும் தன்னாட்சி வழங்கும் புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட வேண்டும் என்றும்— அதனை உருவாக்குவதற்காக விசேடமாக அரசியல் சாசன மன்றம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் கோரும் தீர்மானங்களும் இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

(உ-எ-10)

## தலைவர் பிரபாவின் படம் சென்னைப் பேரணியில்!

பாட்டாளி மக்கள் கட்சி நேற்று முன்தினம் சென்னையில் முக்கிய வீதிகள் ஊடாக நடத்திய பேரணியில் தமிழ் இனத்தின் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் பெரிய புகைப்படங்கள் பல தாங்கிச் செல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

திரு. பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவான கோஷங்கள் எழுப்பப்பட்டதாகவும் சென்னையில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

பேரணியின் முடிவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான உரைகளும் நிகழ்த்தப்பட்டன. (உ-எ-10)

## புலிகளுக்கு பெரும் ஆதரவுக் குரல் சென்னைப் பேரணியில் ஒலித்தது!

சென்னை, செப். 14

பாட்டாளி மக்கள் கட்சி கடந்த வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று தினங்களும் சென்னையில் நடத்திய மாநாட்டிலும் —

அதையொட்டி இறுதி நாள் இடம்பெற்ற பேரணியிலும்—

பேரணி முடிவில் மெரினா சீரணி அரங்கில் நடைபெற்ற கூட்டத்திலும் விடுதலைப் புலிகளுக்கு பெரும் ஆதரவுக் குரல் ஒலித்தது.

புலிகளுக்கு ஆதரவாக — தமிழீழம் அமைப்பதை அங்கீகரிக்கக் கோரும் — தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், புலிகளுக்கு ஆதரவான உரைகளும் நிகழ்த்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாநாட்டின் இறுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விசேட விருந்தினர்களாகக் கலந்து கொண்ட முன்னாள் பிரதமர் வி. பி. சிங், எம். எஸ். மான், முன்னாள் அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான், பிரகாஷ் அம்பேத்கர், சித்தபாசு, கன்ஷிராம், கி. வீரமணி, ப. நெடுமாறன், சிவாஜி கணேசன், குன்றக்குடி அடிகளார், எஸ். திருநாவுக்கரசு, பண்ருட்டி எஸ். இரா[illegible] பல முக்கிய பிரமுகர்கள் பங்குபற்றினர். (உ-எ-10)

## காங்கிரஸ், பாரதீய ஜனதா பாட்டாளி கட்சி மீது சீற்றம்

சென்னை, செப். 14

பாட்டாளி மக்கள் கட்சி எடுத்துள்ள பிரிவினைவாதப் போக்கையும் விடுதலைப் புலிகள் சார்புப் போக்கையும் மாநில இந்திரா காங்கிரஸும், பாரதீய ஜனதாக் கட்சியும் கண்டித்துள்ளன.

தேச விரோத நடவடிக்கைகளுக்காக பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசாங்கத்தையும், மாநில அரசையும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். செஞ்சிலுவைக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், செப். 14

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை தலைமையகத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு வாக்கெடுப்பு மூலம் நடைபெற்றது. முன்னர் எதிர்பார்க்கப்பட்டது போல போட்டி தவிர்ப்பு ஏற்படவில்லை.

தலைவராக வைத்திய கலாநிதி தம்பிராசா இங்கராசா 308 அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். அவருடன் போட்டியிட்ட திரு. பி. எஸ். திருச்செல்வத்துக்கு 38 வாக்குகள் கிடைத்தன.

உப தலைவராக சுந்தரலிங்கம் புவனேந்திரன் 314 அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். அவருடன் போட்டியிட்ட திரு. துரையப்பா ஜெயபரணம் 31 வாக்குகளைப் பெற்றார்.

இப்பதவிக்கு வேட்புமனுத் தாக்கல் செய்திருந்த திரு. மு. ஒப்பிலாமணி வாக்களிப்பு நடைபெறுவதற்கு முன்னர் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவில் ஆண்டு - 9



**திருமதி சுதந்திரநாயகி (தேவி) கிளேற்ரன்**

பிறப்பு: 10-02-1948 — இறப்பு: 14-09-1983

"சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

உம்பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
அம்மா, சகோதர, சகோதரிகள்.

16, றக்கா ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: இவரது ஆத்மசாந்திக்காக இன்று [14-09-92] காலை 6 மணிக்கு யாழ். ஆச்சிரம தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
[சி/3269]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வேலுப்பிள்ளை செல்லையா**

தோற்றம்: 08 — 05 — 1922 — மறைவு: 19 — 08 — 1989
திதி: 14 — 09 — 1992

ஆல மரமாய் அனைவோர்க்குந் தண்ணிழலாய்ச்
சீலனாய் வாழ்ந்த செல்லைய - சால
மூவாண்டு கழிந்ததையா நின்பிரிவு நாளெண்ணில்
மாவாலே பணிகின்றோம் பணிந்து.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

250/1, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
[22540]

## உற்சவங்கள்

குருநகர், செப். 14

யாழ். வண்ணை நாவலடி ஒழுங்கை கற்பக விநாயகர் ஆலய அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான இன்று விநாயகப் பெருமானுக்கு விசேட அபிஷேகம், பூசை என்பன நடைபெறும். [உ-51]

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 14

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை காட்டுத்துறை அருள் மிகு ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் கோவில் சங்காபிஷேகம் இன்று நண்பகலும் மணவாளக்கோல உற்சவம் இன்று மாலையும் நடைபெறும். [உ]

## இறுதியாட்டம் இன்று

குருநகர், செப். 14

அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் நினைவாக யாழ். மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டு வந்த 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டமும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று மாலை 3 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலாவும், சிறப்பு விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதியும் கலந்து கொள்வர்.

இன்று மோதவிருக்கும் அணிகளின் விபரம் பின்வருமாறு:-

★ நாவாந்துறை சென். நீக்லஸ் வி. க. அணி எதிர் பாஷையூர் சென். அன்ரனீஸ் வி. க. அணி.

★ குருநகர் பாடும்மீன் வி. க. அணி எதிர் நாவாந்துறை சென். மேரிஸ் வி. க. அணி. (உ-51)

## மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவு

### தொடரில் ஆஸி வென்றது

இலங்கை அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்குமிடையில் மொறட்டுவை டிரோன் பெர்ணாண்டோ மைதானத்தில் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியானதுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டி வெற்றி—தோல்வியின்றி முடிவுற்றது.

அணிகள் பெற்ற ஓட்ட எண்ணிக்கை விபரம் வருமாறு:-

ஆஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 337 ஓட்டங்கள். இரண்டாவது இன்னிங்ஸில் 8 விக்கெட் இழப்பிற்கு 271 ஓட்டங்கள்.

இலங்கை அணி:- முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்பிற்கு 274 ஓட்டங்கள்.

இந்த டெஸ்ட் போட்டித் தொடரில் ஆஸ்திரேலிய அணி 1-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. [உ-எ-10]

## செஞ்சிலுவை யாழ். கிளை கணக்குகளில் குளறுபடி!

யாழ்ப்பாணம், செப், 14

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின்—1991 ஆம் ஆண்டு டிசம்பருக்கு முற்பட்ட காலப்பகுதியின்—வரவு செலவு கணக்குகளில் பல குளறுபடிகளும், தவறுகளும், காணப்படுகின்றன.

அக்கணக்குகளைப் பரிசீலனை செய்த உள்ளகக் கணக்காய்வாளர் தமது அறிக்கையில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

செஞ்சிலுவைச் சங்க விற்பனை நிலைய இருப்புப் பதிவேடுகளில் போதிய தகவல்கள் குறிக்கப்படாமை —

பயணக் கொடுப்பனவுக்கான பயணப் பத்திரங்கள் சரியாகப் பூர்த்தி செய்யப்படாமை —

பொருள் கொள்வனவுப் பட்டியலில் கொள்வனவுகள் தொடர்பாக முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய பொருள்களின் எடைபற்றிய விபரத்தை குறிப்பிடாமல் விட்டமை —

கூறுவிலை கோரப்படுவதில் காணப்படும் ஒழுங்கீனம் —

செலவினங்களில் பிசகு —

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காணாமற்போனோர் எண்ணிக்கை மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகம்

கொழும்பு, செப். 14

மட்டக்களப்பு மாவட்டத்திலேயே ஆகக் கூடுதலானோர் காணாமற் போயுள்ளனர்.

மனித உரிமைகள் செயலணிக் குழு தனது முதலாவது ஆண்டு அறிக்கையில் முன்கண்ட தகவலை வெளியிட்டிருக்கிறது.

37 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில்—

1988 முதல் 1991 வரையான காலத்தில் காணாமற்போனவர்கள் பற்றி 3 ஆயிரத்து 589 முறைப்பாடுகள் கிடைத்தன என்றும்—

அவற்றில் 2 ஆயிரத்து 143 மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமற்போனவர்கள் சம்பந்தப்பட்டவை என்றும் மனித உரிமைகள் செயலணிக் குழு தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 648 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 188 பேரும் காணாமற் போயுள்ளனர். காணாமற்போனதாகக் கூறப்பட்டவர்களில் 93 பேர்களே கண்டுபிடிக்கப்பட்டனர் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## முற்றவெளியில் மிதிவெடி; பெண் கால் இழந்தார்

யாழ்ப்பாணம், செப். 14

விறகு எடுக்கச்சென்ற குடும்பப் பெண் ஒருவர் மிதிவெடியில் சிக்கி இடது கால் பாதத்தை இழந்தார்.

யாழ். கோட்டைப் பகுதியில் (தபாற் கந்தோருக்கு முன்பாக உள்ள தரவை வெளியில்) — முற்றவெளியில் — நேற்று மாலை 8 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் வேலணையில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் கொட்டடி சத்திரத்துச் சந்திப் பகுதியில் வசித்து வந்த பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரி [வயது 38] என்ற பெண்ணே பாதத்தை இழந்தார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-15]

## தேவை

யாழ். பிரபல புகைப்பட நிலையத்திற்கு புகைப்படங்கள் கழுவுவதில் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்பும் 18 — 25 வயதிற்கு இடைப்பட்ட இருபாலாரும், முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

முடிவுத் திகதி: 30 — 09 — 1992

இல. 440, மே/பா உதயன்.

[22549]

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஆங்கீரச வருடம் ஆவணி மாதம் 29ஆம் நாள் [14-09-1992] திங்கட்கிழமை மாலை 4-10 மணிமுதல் 6-40 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**தனேந்திரன்**<br>(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>**சிவராணி (தயா)**<br>அவர்களுக்கும் |

திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று, மேற்படி திருமண வைபவம் மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால், தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்:

திரு. ச. கதிர்காமத்தம்பியும் பாரியாரும்
கந்தசுவாமி கோவிலடி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

திருமதி பரமேஸ்வரி செல்வநாயகம்
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

( இருவீட்டார் அழைப்பு )
[22550]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கொழும்பில் தங்கியுள்ள

# அகதிகளை பலவந்தமாக திருப்பி அனுப்பமாட்டோம்

## அமைச்சர் தயாரத்ன தகவல்

கொழும்பு, செப். 14

கொழும்பில் உள்ள அகதி முகாம்களில் தங்கி வாழும் அகதிகளை அவர்களின் சொந்த இடங்களுக்கோ அல்லது வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அகதி முகாம்களுக்கோ பலவந்தமாக அனுப்பி வைக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இடையாது.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்தினா முன்கண்டவாறு அறிவித்திருக்கின்றார்.

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் இவ்வாறு தெரிவித்தன.

சுயவிருப்பத்தின் பேரில் மீளக்குடியேற கொழும்பில் தங்கியுள்ள அகதிகள் எவரும் எண்ணங் கொண்டிருந்தால் அதற்கான சாத்தியம் குறித்து அவர்களது மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்தாலோசித்த பின்னரே அத்தகைய அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் அமைச்சர் சொன்னார்.

(த-எ)

## 7 ஆயிரத்து 356 கைதிகள் முகாம்களில் தடுத்து வைப்பு

கொழும்பு, செப்: 14

நாடெங்கிலுமுள்ள தடுப்பு முகாம்களில் 7 ஆயிரத்து 356 தடுப்புக் கைதிகள் உள்ளனர். இவர்களில் 5 ஆயிரத்து 623 பேர் சிங்கள இளைஞர்கள்.

மனித உரிமைகள் பற்றி ஆராயும் ஆணைக்குழு வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் இத்தகவல் வெளியாகியுள்ளது.

முகாம்களில் உள்ளவர்கள் எவ்வித விசாரணைகள் இன்றியும், நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாமலும் தடுத்து வைக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் —

3 ஆண்டுகளுக்கு மேல் கைதிகளை இவ்வாறு தடுத்து வைத்திருத்தல் கூடாது என்றும் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (த-10)

### அகதிகளின் நலன்களை பார்வையிட

## கட்சிப் பிரதிநிதிகளின் குழு மட்டக்களப்பு விஜயம்!

கொழும்பு, செப். 14

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அகதி மக்களின் சேமநலன்களைப் பார்வையிடுவதற்கும் அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு வேலைகள் தொடர்பாக ஆராய்வதற்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் குழு ஒன்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அதிகாரிகள் சகிதம் கடந்த சனிக்கிழமை விசேட விமான மூலம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தது.

வீச்சுக்கல்முனை, களியங்காடு, சாஹிராக் கல்லூரி ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களை இக்குழு நேரில் சென்று பார்வையிட்டது. (த-எ)

## ரூ. 40 லட்சம் அபராதத்தை ஒரு தடவையில் செலுத்தினர்

கொழும்பு. செப். 14

சிங்கப்பூரிலிருந்து 35 லட்சம் ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளைக் கடத்தி வந்த மூவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பகுதியினரிடம் அகப்பட்டுக்கொண்டனர்.

இவர்களுக்கு 40 லட்சம் ரூபாவை சுங்கப்பகுதியினர் அபராதமாக விதித்தனர். ஆனால் அந்த மூன்று கோடீஸ்வரர்களோ இவ்வளவு பெரிய தொகையைப் பற்றி சற்றும் சிந்திக்காது அபராதத்தை உடனேயே செலுத்திவிட்டு விமான நிலையத்தைவிட்டு வெளியேறிவிட்டனர்.

சுங்கப்பகுதி வரலாற்றில் இவ்வளவு பெரிய தொகை அபராதம் ஒரே தடவையில் செலுத்தப்பட்டது இதுவே முதல் தடவையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதியோர் தினத்தை முன்னிட்டு மாபெரும் ஊர்வலம்

கொழும்பு, செப். 14

நாடெங்கும் உள்ள ஓய்வூதியர்கள் அடுத்த மாதம் 8 ஆம் திகதி 'முதியோர் தினத்தை'யொட்டி மாபெரும் ஊர்வலம் ஒன்றுக்கு ஏற்பாடுகள் செய்துள்ளதாக, இலங்கை ஓய்வூதியர் சங்க சம்மேளனத்தின் தலைவர் டீ. ஜே எம். பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில்;

வயதாகும் வரை வேலை வாங்கிவிட்டுப் பின்னர் இறைச்சிக்கடைக்கு அனுப்புவது போலத்தான் இன்று ஓய்வூதியர்கள் இந் நாட்டில் நடத்தப்படுகிறார்கள். ஓய்வூதியர்களுக்கு உள்ள பிரச்சினைகளை வெளிக்கொணர்வதற்காகவே இந்த ஏற்பாடு நடைபெறுகிறது—என்றார்.

(த-10)

## கொழும்பில் சவூதி தூதரகம்

கொழும்பு, செப். 14

சவூதி அரேபியா தூதரகம் கொழும்பில் அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி திறந்து வைக்கப்படும்.

ஜகார்த்தாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டின் போது சவூதி அரேபியா வெளிநாட்டமைச்சர் சவுத் அல் பய்சாலும் இலங்கைப் பிரதமர் டி. பி. விஜேதுங்கவும் நடத்திய பேச்சு வார்த்தையின் போது இதற்கான இணக்கம் காணப்பட்டது. (த-10)

## குமணவில் நோயாளர் செல்வர்

யாழ்ப்பாணம், செப். 14

கொழும்பில் மேலதிக சிகிச்சை பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட மற்றொரு தொகுதி நோயாளர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி 'குமண' கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

எனவே கொழும்பில் சிகிச்சைபெறுவதற்காக பதிவு செய்த நோயாளர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு முன்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சமுகமளிக்க வேண்டும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நோயாளர்கள் வரும் பொழுது இரண்டு நாட்களுக்குப் போதுமான உணவு, நீர் மற்றும் மருந்து பாவிப்பவர்களானால் ஒரு வாரத்திற்குத் தேவையான மருந்துகள், நோய்க்கான சகல ஆவணங் [illegible] ளது.

## விவசாயிகள் தினத்தை அக்டோபரில் நடத்த முடிவு

கொழும்பு செப். 14

இலங்கையில் வருடா வருடம் விவசாயிகள் தினத்தை நாடு முழுவதிலும் நடத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த வகையில் இவ்வருடத்துக்கான விவசாயிகள் தினம் எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் இடம்பெறும்.

விவசாயிகள் தின விசேட நிகழ்ச்சிகள் இம்முறை பொலநறுவையில் இடம்பெறும். இதனை முன்னிட்டு அக்டோபர் மாதம் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை பொலநறுவையில் விசேட விவசாயக் கண்காட்சியொன்றும் இடம்பெறவுள்ளது.

## பாட்டாளி மக்கள்கட்சி மாநாட்டில் வி.பி.சிங்!

சென்னை, செப். 14

சென்னையில் கடந்த சனிக்கிழமை பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய தமிழர் வாழ்வு உரிமை மாநாட்டில் முன்னாள் பிரதமரும், ஜனதாதள் தலைவருமான திரு. வி.பி. சிங் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

இம் மாநாட்டில் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் சட்டசபை உறுப்பினரான பண்ருட்டி இராமச்சந்திரன், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி ஆகியோரும் பேசினார்கள்.

முன்னதாக சைதாப்பேட்டையில் இருந்து சீரணி அரங்குக்குச் சென்ற பேரணியில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது. குதிரைப்படை, கரகாட்டம், சிலம்பாட்டம் போன்ற வீர விளையாட்டுக்களும் பேரணியில் இடம் பெற்றன.

(த-எ)

## செட்டிக்குளத்தில் பொலீஸ் நிலையம் நிர்மாணிக்க ரூ. 50 லட்சம் ஒதுக்கீடு

செட்டிக்குளத்தில் புதிய பொலீஸ் நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டடத்தை நிர்மாணிக்க ஐம்பது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட பொலீஸ் அதிபர் திரு. எஸ். எஸ். நவரத்தினராஜா தெரிவித்தார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டுள்ளது. (த-எ)


## பதவி வெற்றிடம்


யாழ் நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றின் பின்வரும் பதவிகளுக்கு அறிவும், ஆற்றலும் அனுபவமும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ முகாமையாளர்
★ கணக்காளர்
★ கணக்கியல் உதவியாளர்
★ அந்தரங்கச் செயலாளர்
★ அலுவலக உதவியாளர்கள்

முன் அனுபவம், கல்வித்தகமை. வயது மற்றும் விபரங்களுடன் 25 - 09 - 92 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 441
C/o உதயன். (22558)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 30 | 16 |
| 09 | 08 |
| 1925 | 1992 |

அமரர்

### பொன்னுத்துரை சோதிசுந்தரம்


(இளைப்பாறிய அஞ்சல் அதிபர்)

காலஞ்சென்ற எமது குடும்பத் தலைவரின் 31 ஆம் நாள் கிரியைகள் எமது இல்லத்தில் 15-09-92 செவ்வாய்க்கிழமை நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-பிள்ளைகள்.

கோப்பாய் சந்தி,
கோப்பாய். [225[illegible]]

## 37 ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 01 | 09 |
| 02 | 08 |
| 1911 | 1992 |

### அமரர் நீ. வ. நவரெத்தினம்

(முன்னாள் வர்த்தகர், தெமட்டகொட)

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரம் வயித்திலிங்கம் - நவரெத்தினம் 09 - 08 - 1992 இல் புங்குடுதீவில் காலமானார். இவரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புங்குடுதீவு மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

துக்க அனுஷ்டிப்புக்கள், அந்தியேட்டி, வீட்டுக் கிருத்தியங்கள் புங்குடுதீவிலும், கொழும்பிலும் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகள் -
திருமதி லோகநாயகி அருளலிங்கம்
(ஆசிரியை, யா/வைத்தீஸ்வராக் கல்லூரி)

463, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி. [22547]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பெண். தமிழ் தட்டெழுத்தாளர் தேவை. அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்கள்: 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 21-9-92க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். (5313)

## விற்பனைக்கு

50 பேர் இருக்கக் கூடிய தரை விரிப்பு, மதுரைத் தமிழ் அகராதி, வீட்டுத் தளபாடங்களில் சில, நியாய விலையில் விற்பனைக்குண்டு. நேரில் வரவும்: 07, சோமசுந்தரம் அவென்யூ, சுண்டிக்குளி. [22516]

## விற்பனையாகின்றன

இலகு ஆங்கிலம் [English-made Easy] ஆண்டு 4, 5, ,6 ரூ. 19-50. எல்லா வகுப்புகளுக்குமேற்ற இலகு தமிழ் இலக்கணம் ரூ. 12.50 தமிழ்த் தென்றல் - யாதுமூரானின் கவிதைகள் ரூ. 20.00. [22498]

## மணமகன் தேவை

பருத்தித்துறையைச் சேர்ந்த 20 வயது, புனர்பூசம் நட்சத்திரம், A/L படித்த, அழகிய பெண்ணுக்கு வெளிநாட்டில் அல்லது உள்நாட்டில் மணமகன் தேவை. சீதனம் கொடுக்கப்படும். சகல விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: இல: 439, மே/பா, உதயன். [22535]

## சதுரங்க வகுப்புகள்

எதிர்வரும் 05-10-92 விஜய தசமி அன்று ஆண், பெண் இருபாலாருக்குமான சதுரங்க வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. பயில விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். ஞானக்குழந்தை இல்லம், 49/5, யாழ். றோட், யாழ்ப்பாணம். [22534]


**C. C. A.**
யாழ்ப்பாணம்.
**O/L வினா-விடை**
கணிதம் —
திரு. அருட்செல்வம்
சமூகக்கல்வி —
திரு. கணேஷ்
ஆரம்பம்:
15 — 09 — 1992
நேர அட்டவணை
நேரில் பெறவும்.
[சி-3267]


# மாகாணசபை தேர்தல்கள்; திணைக்களம் தயாராகிறது

கொழும்பு, செப். 14

இன்னும் எட்டு மாதங்களின் பின்னர் நடைபெற இருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த தேர்தல் திணைக்களம் தயாராகி வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாகாணசபையின் முதல் கூட்டத்தில் இருந்து ஐந்து ஆண்டுகளின் பின்னர் இச்சபைகள் கலைக்கப்படவேண்டும் என்பது சட்டவிதியாகும்.

எனவே அடுத்த ஆண்டு மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டாக வேண்டும் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (த-எ)


Personal
New Science Centre
Day Classes
93 A/L
PURE/APP.
திரு. குணசிங்கம்
B.Sc [Hons]
CHEMISTRY
திரு. செல்வா B.Sc [Hons]
PHYSICS
பிரபல ஆசிரியர்
"சயன்ஸ் சென்ரர்"
எழிலகம் முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
[சி-3265]


## 2,000 பேர் பலி

ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் கடந்த மூன்று வாரச் சண்டையில் சுமார் 2000 பேர் உயிரிழந்துள்ளனர். 9000 பேர் வரை காயமடைந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 02 | 27 |
| — | — |
| 06 | 08 |
| — | — |
| 1926 | 1991 |

அமரர்

## பொன்னையா தன்மாவரதர்

[இளைப்பாறிய புகையிரத கட்டுப்பாட்டு நிலைய பிரதம அதிகாரி]

திதி: 14 — 09 — 1992

அன்புத் தெய்வமே!
உங்கள் அழகு திருமுகத்தையும்
பாசமிகு வார்த்தைகளையும் காணாது
ஏங்கித்துடிக்கும் நாங்கள்
உங்கள் ஓராண்டு திதித்தினமாகிய
இன்று எல்லாம் வல்ல முருகப் பெருமானின்
பாதார விந்தங்களில் தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டி மனதார பிரார்த்திக்கின்றோம்;

உங்களை என்றும் மறவாத!
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"சிதசபதி"
கைதடி வடக்கு,
கைதடி.
[5312]

# ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 29 | 28 |
| — | — |
| 09 | 08 |
| — | — |
| 1923 | 1991 |

## திருமதி நல்லம்மா முத்தையா

திதி: 14 — 09 — 1992

அன்பின் சிகரமே! அருமை அம்மா!
அன்பாலும், பண்பாலும்,
அரவணைத்து வளர்த்தீர்களே!
ஆண்டு ஒன்று சென்றாலும், ஆறாது எம் துயர்
உங்கள் உருவம் எம் மனதில்
நீங்காது நிலைத்திருக்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

24, அராலி வீதி,
ஓட்டுமடம்,
4, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
[22537]

# ஓராண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 22 | 27 |
| — | — |
| 12 | 08 |
| — | — |
| 1927 | 1991 |

அமரர்

## முருகேசு அம்பலவாணர் தம்பிஐயா

(பிரபல வர்த்தகர், லட்சுமி ஸ்ரோர்ஸ்- பொலநறுவை, சிவா அரிசி ஆலை - நாவற்குழி)

திதி: 14 — 09 — 1992

ஏக புத்திரனே எங்கள் அருமை ஐயாவே!
திருதியை தினமதிலே எங்களை
ஏங்க விட்டு எங்கு சென்றீர்கள்?
புன்னகை குடியிருக்க புகழ்வண்ணம் சேர்ந்திருக்க
வர்த்தகத்தில் அறிவு சிறந்திருக்க-
அன்புள்ளம் நிறைந்திருக்க
கண்ணியம் நிறைந்த உங்கள் புன்னகை முகம்
காணாது ஏங்கித் தவிக்கிறோம் ஐயா!
பார்த்திபை கட்டி எம்மை
பண்புடனும், பாசத்துடனும் வளர்த்துவிட்டு
பூத்த நல் மணத்தைச் சிந்தி
வாழ்ந்திடும் வேளைதனில் காற்றென எம்மைவிட்டு
இறைவன் ஏன் உங்களை அழைத்தார் ஐயா!
எக்காலை எது வரினும்
எக்கருமத்தைச் செய்தாலும்
முருகன் அருள்பெற்றே செல்வீர்கள்!
இனி எவ் இன்பம் எமக்கு நேர்ந்தாலும்
வழிகாட்டி இன்றி வாழத் தவிக்கிறோம்
எம் வாழ்வு ஒளிபெற!

தெய்வமான உங்களையே வணங்கி உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் உயிர் உள்ளவரை இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் தவிக்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
பேர்த்தி,

"குகநிதி",
கைதடி வடக்கு, கைதடி.
[22504]

# 6ஆம் ஆண்டு நினைவு




## கந்தையா நல்லம்மா

எங்கள் அன்புத் தாயே!
இரவு பகலாக உங்கள்
நினைவுதான் தாயே!

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு.
[சி-3339]

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 12 | 14 |
| — | — |
| 05 | 09 |
| — | — |
| 1937 | 1987 |

## அமரர் மனவல் றொபேட்ஸ்

[அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்]

ஐந்தாண்டு கடந்ததையோ
ஆறாத் துயர் அகலவில்லை
அணைத்து எம்மை ஆட்கொண்ட
அன்பு நிலை அழியவில்லை
அப்பா! வென்றுமை யழைத்த
அந்த நாள் இனிவருமோ?

நின் பிரிவால் நினைந்துருகும்;
மனைவி, மக்கள்.

57, பாலுடையார் வீதி,
யாழ்ப்பாணம்.
[22544]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ஒப்புக்கொள்ள 15 வருடங்கள்

தமிழர்களின் உரிமைப் போராட்டம் தீவிரமடையத் தொடங்கிய பின்னரே அரசாங்கத் தரப்பில் மனித உரிமை மீறல்கள் பெருக ஆரம்பித்தன. கொழும்பில் இரகசியப் பொலீஸ் விசாரணைப் பிரிவின் நான்காம் மாடியில் தொடங்கி பூசா தடுப்புக்காவல் முகாம் வரை தமிழ் இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டதுடன் இந்நாட்டில் மனித உரிமை மீறல்கள் பெரிய அளவில் தலைகாட்டின.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் வளர்ந்தகால் தமக்கும், அரசுக்கும், சிங்களவருக்கும் ஆபத்து என்பதை அப்போதைய ஜனாதிபதி ஜே ஆர். உணர்ந்தார். எனவே தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்துக்குப் 'பயங்கரவாதம்' என்று பெயரிட்டார். அந்தப் 'பயங்கரவாதத்தை' அரச பயங்கரவாதத்தால் அழிக்க முயன்று கண்ணை மூடிக்கொண்டு மனித உரிமை மீறல்களைக் கட்டவிழ்த்துவிடத் தூண்டினார்.

போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று கர்ச்சித்த அவர் 'பயங்கரவாத'த்தை ஒழிப்பதற்கு யாழ்ப்பாணத்திற்கு பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்காவை, ஆறு மாத கால அவகாசம் கொடுத்து அனுப்பினார் அதன் பின்னர் தமிழ் இளைஞர்களை நினைத்தபடி கொல்வதும், கண்டபடி கைது செய்து சித்திரவதை செய்வதும் இயல்பான நடவடிக்கைகளாக மாற்றப்பட்டன. வடக்கில் இராணுவத்தினரும் பொலிஸாரும் செய்த அட்டூழியங்களைவிட கிழக்கில் அதிரடிப் படையினர் புரிந்த அக்கிரமங்களை சொல்லி முடியா.

அதிலிருந்து தமிழர்களின் வாழ்வுரிமைகளும். மனித உரிமைகளும் வரம்பின்றி அரச படைகளால் தொடர்ந்து மீறப்பட்டு வருகின்றன. எனினும் ஜே. ஆர். தொடக்கம் லலித் வரையும், பிரேமதாசா முதல் ரஞ்சன் வரையும் தமிழர் மீது அரச படைகள் கட்டவிழ்த்துவிட்ட மனித உரிமை மீறல்களை மறுத்து வந்தனர்.

எத்தனை காலம் தான் ஏமாற்றலாம்? உலக நாடுகளுக்கு உண்மை தெரிந்தது. மனித உரிமைகளைப் பேணாவிடில் அவற்றை மீறினால் நிதி உதவி வழங்க முடியாது என்று அவை நிபந்தனை விதித்தன.

அந்த அழுத்தங்களையும், நெருக்குதல்களையும் சமாளிப்பதற்காக நியமிக்கப்பட்டது தான் மனித உரிமை மீறல் ஆணைக்குழு ஒருவருடத்திற்கு முன்னர் நியமிக்கப்பட்ட அந்தக் குழு தனது ஆண்டறிக்கையில் அரசாங்கப் படையினரும் (இராணுவத்தினரும்) பொலிஸாரும் மனித உரிமைகளை மீறியிருப்பதை ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆதாரங்களுடன் எடுத்துக் கூறியுள்ளது.

படையினரும் பொலிஸாரும், போராளிகளால் தமக்கு ஏற்படும் இழப்புக்களுக்காக, நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ் மக்களை கொல்வதே கடந்த பல வருடங்களாக தமிழ்ப் பகுதிகளில் நடந்து வரும் பழிவாங்கல் கொலைகளாகும்.

கடந்த பதினைந்து வருடங்களாக அரசாங்கம் மறுத்தும் மறைத்தும் வந்த உண்மையை ஆணைக்குழு ஒப்புக்கொண்டிருப்பது ஒரு பெரிய திருப்பமாகும். காலத்தின் நிர்ப்பந்தம் விளைத்த பலன். தமிழர்கள் எவ்வாறு நியாயமின்றி, காரணமின்றி இன அழிப்புச் செய்யப்படுகிறார்கள் என்பதை இனியாவது வெளி உலகம் உணர்ந்து கொள்ளட்டும்.

---

பிரேமாவின் வெளிநாட்டு விஜயத்தின் பின்னர்

# அமைச்சரவை மாற்றங்கள் இடம் பெறலாம் என ஊகம்

கொழும்பு, செப். 14

அமைச்சரவை மாற்றங்கள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் சார்க் நாடுகளுக்கான விஜயத்தின் பின்னர் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு தமிழ் தினசரி ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை மீதான வெற்றியைத் தொடர்ந்து, அமைச்சரவையில் சில மாற்றங்களைச் செய்ய ஜனாதிபதி பிரேமதாஸா ஆலோசித்து வருவதாக ஜனாதிபதி மாளிகையுடன் தொடர்புடைய வட்டாரங்களை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அரசாங்க நிர்வாக இயந்திரத்தை பொதுமக்களின் தேவைக்காக சீர்திருத்தி அமைக்கும் நோக்கத்துடன் இந்த அமைச்சரவை மாற்றங்கள் இடம் பெறவிருப்பதாகவும் —

ஆனாலும் ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயண முடிவின் பின்னரே இம் மாற்றங்கள் செய்யப்படலாம் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சராகப் பணிபுரியும் ரணில் விக்கிரமசிங்காவுக்கு முக்கிய பொறுப்புள்ள அமைச்சு வழங்கப்படலாம் எனவும் சொல்லப்படுகின்றது.

[த-எ]

---

## தியாகி திலீபன்...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]

ளில் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெறும். அவ்வப்பகுதிகளைச் சேர்ந்த பொது ஸ்தாபனங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் வாசிகசாலைகள் மற்றும் தனியார், அரச நிறுவனங்கள், அமைப்புக்கள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும், பொது மக்களும் இந்நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவர்.

இந்நிகழ்ச்சிகளில் —

திலீபனின் நினைவுப் பாடல்களை ஒலிபரப்புதல், நினைவுரைகள் நிகழ்த்துதல், கவிதைகள், கட்டுரைகள் வாசித்தல், வில்லிசை போன்ற கலை நிகழ்ச்சிகளை நடத்துதல் ஆகியவையும் திலீபனின் 12 நாள் உண்ணா நோன்பு பற்றிய படப்பிரதி ஒளிபரப்புதலும் இடம்பெறும்.

இந்தக் காலத்தில் பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து தியாகி திலீபனை நினைவு கூர்ந்து. பேச்சுகள், கவிதைகள், கட்டுரைகள் வாசித்தல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துவர்; மற்றைய பொது நிறுவனங்களிலும் இத்தகைய நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

அவ்வப்பகுதிகளில் சிரமதானப் பணிகளும் இடம் பெறும்.

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களிலும், பிரதான சந்திகளிலும், வீடுகள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் முன்றலிலும். பாடசாலைகளிலும் திலீபனின் திருவுருவப் படங்களை வைத்து, அலங்கரித்து, மலர் தூவி, விளக்கேற்றி ஆராதனை செய்யும் ஏற்பாடுகளை மக்கள் செய்வர்.

தியாகி திலீபனின் நினைவு நாளான—செப்டம்பர் 26ஆம் திகதி கோட்ட மட்டங்களில் மூன்று இடங்களில் மாபெரும் பொதுக்கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

வலிகாமத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயில் பகுதியிலும், வடமராட்சியில் மாலிசந்தியிலும், தென்மராட்சியில் மீசாலை மாவடிப் பிள்ளையார் கோயிலடியிலும் இறுதிநாள் நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெறும்.

---

சுதந்திரக்கட்சியில்:

# தகுதியானவர்களுக்கு இடம் வழங்கப்படவில்லை

### அனுரா கூறுகிறார்

கொழும்பு, செப் 14

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பீடம் தகுந்த நபருக்கு தகுதியான இடத்தை வழங்கவில்லை.

சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா முன்கண்டவாறு கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

பண்டாரநாயக்கா குடும்பத்தைச் சேராத ஒருவர் கட்சியின் தலைமையை ஏற்கும் நாளை தாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

தமது தாயாரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சித்தலைமையைக் கைவிடும் போது அப்பதவிக்குத் தாம் போட்டியிடப்போவதாகவும் அனுரா அறிவித்தார்.

வத்தளை நில்மினி மண்டபத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளை ஒழுங்கு செய்திருந்த கருத்தரங்கில் பேசியபோதே அனுரா பண்டாரநாயக்கா இத்தகவல்களை வெளியிட்டார்

"பின் கதவால் கட்சிக்குள் நுழைந்தவர்கள் கட்சியில் முக்கிய பதவிகளைப் பெற வேண்டுமானால் சரியான வழி முறைகளைப் பின்பற்றி வரவேண்டும்.

"கட்சித் தலைமைக்குக் கதை காவிச் செல்லும் கழுத்தறுப்பாளர்கள் கட்சியில் ஏராளமாக உள்ளனர்.

"உட்கட்சி ஜனநாயகம் எம்மிடம் இல்லை என்றால் ஜனநாயகம் பற்றி பேச எமக்கு உரிமை கிடையாது.

"எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சரியான வழி, கட்சித் தேர்தல்களை விரைவாக நடத்துவதே.

"1956 ஆம் ஆண்டில் உருவான பண்டாரநாயக்கா கொள்கைகளை இன்றைய சந்ததியினருக்கு அர்த்தமுள்ளதாக்க வேண்டுமானால் இன்றைய தேவைகளுக்கு ஏற்ற வகையில் இக்கொள்கைகள் மீளமைக்கப்பட வேண்டும்"

இவ்வாறு அனுரபண்டாரநாயக்க தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி எம். பி ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பேசுகையில்—

ஜனாதிபதி பிரேமதாஸாவை ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிப்பது கஷ்டம் என்று தெரிவித்தார். (த-எ)

## கருத்தரங்கு

றோட்டறி கழகத்தின் மாணவர் அமைப்பான 'இன்ரறக்ட்' கழகம் அமைந்துள்ள பாடசாலைகள் தோறும், யாழ் றோட்டறிக் கழகம் கடந்த வாரம் முதல் போதைவஸ்து தடுப்பு பற்றிய கருத்தரங்குகளை நடத்தி வருகிறது.

## சு. க, தலைமைக்கு மைத்திரி?

சுதந்திரக் கட்சியின் தலைமை திரு. மைத்திரிபால சேனநாயக்காவுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் கோரியுள்ளனர். இப்படி கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 45 ஆண்டுகளாக அரசியல் பணி ஆற்றிவரும் திரு. மைத்திரிபால சேனநாயக்காவைக் கௌரவிக்கும் நிகழ்ச்சிகளை நடத்த கட்சித் தலைமை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

திரு. மைத்திரிபால சேனநாயக்கா, சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரும், முன்னாள் அமைச்சருமாவார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்டு கட்சித் தலைமையை திரு மைத்திரிபால சேனநாயக்காவிடம் கையளிப்பதே அவருக்குச் செய்யக்கூடிய சிறந்த பாராட்டாகும் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## யாழ். செஞ்சிலுவை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செயலாளராக பேராசிரியர் சிசுவலிங்கம் கணபதிப்பிள்ளை கணேசலிங்கம் 314 அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். அவருடன் போட்டியிட்ட திரு. சோமசுந்தரம் விக்னேஸ்வரன் 34 வாக்குகளைப் பெற்றார்.

பொருளாளராக திரு. கோணையா தியாகராசா, 300 அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். அவருடன் போட்டியிட்ட இராமுப்பிள்ளை தர்மலிங்கம் 39 வாக்குகளைப் பெற்றார்.

ஐந்து நிர்வாக சபை உறுப்பினர் பதவிகளுக்கு போட்டியிட்ட 16 பேரில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. இ. குருபரன் [192], நா. கணபதிப்பிள்ளை [184], அ. ஸ்ரனிஸ்லோஸ் [177], செ. செல்வரஞ்சன் [146], இ. வேலாயுதம் [130]

14 உதவி அரசாங்க பிரிவுகளிலும் உள்ள கிளைகளில் இருந்து தலா 30 பேர்—மொத்தம் 420 பேர் — வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். ஆனால் 394 பேரே வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

ஐந்து பேர் கொண்ட தேர்தல் குழு ஒன்று தேர்தலை நடத்தியது. யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் விசேட கூட்டமும் பின்னர் தேர்தலும் நடைபெற்றன. வாக்களிப்புக் காலையில் அமைதியாக நடந்தது மாலையில் முடிவுகள் அறிவிக்கப்பட்டன

விசேட கூட்டத்தில் சங்கத்திற்கு ஐந்து போஷகர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதற்கு முன்னர் கடந்த மார்ச் மாதத்தில் நிர்வாகிகள் தேர்தல் கடைசியாக நடைபெற்றது. ஒவ்வொரு தேர்தலுக்கும் தலா சுமார் 25 ஆயிரம் ரூபா செலவாகுவதாக அறியவந்தது.

புதிய நிர்வாகிகள் இரண்டொரு தினங்களில் இடைக்கால நிர்வாகத்திடம் இருந்து பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வர் என்று புதிய தலைவர் தெரிவித்தார்.

[அ-15-162]

---

## துணிவு, விடாமுயற்சி......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குள் இருக்கும் தீவகப் பகுதிக்குள் ஊடுருவி நிலக் கண்ணிவெடி வைத்த விசேட இராணுவ வேவுப்பிரிவைச் சேர்ந்த நான்கு போராளிகளுக்கும், அவர்களது பாதுகாப்புக் குழுவாகச் சென்ற ஐவருக்கும், சக்தி வாய்ந்ததும், நுட்பம் மிகுந்ததுமான இந்தக் கண்ணிவெடியைக் கண்டுபிடித்து அறிமுகம் செய்தவருக்கும், தாக்குதலுக்கு உரிய இடத்தைத் தெரிவுசெய்த தீவகக் கோட்டச் சிறப்புப் பொறுப்பாளருக்கும் இந்தப் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அத்துடன் 05-07-1992 இல் புல்லாவெளியில் சீன டாங்கி ஒன்றை ஆர். பி ஜி. தாக்குதலால் முற்றாக நாசமாக்கிய போராளிக்கும் தலைவரால் பரிசு வழங்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் படைத்துறைக் கட்டமைப்பில் வேவுப் பிரிவு வகிக்கும் முக்கிய பங்கை தலைவர் பிரபாகரன் எடுத்து விளக்கினார்.

"மிகவும் கஷ்டமானதும், மிகவும் சாதுரியமானதும், மிகவும் ஆபத்து நிறைந்ததுமான இந்தப் பணியில் ஈடுபடும் போராளிகள் தரும் தகவல்களைக் கொண்டே தாக்குதல் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன இந்தத் தாக்குதல்கள் வெற்றி பெறுவதற்கும் வேவுப் பிரிவினரின் துணிகர முயற்சிகளும் அவர்கள் பெறும் தகவல்களுமே காரணமாக உள்ளன. இந்த ஆபத்தான பணியில் இறங்கிய பல அற்புதமான போராளிகளையும் நாம் பறிகொடுத்துள்ளோம்."— என்று தலைவர் எடுத்துரைத்தார்.

### உற்சாகம் அளிக்கும்

எமது போராளிகளின் துணிச்சலையும், வீரசாகசச் செயலையும் பாராட்டிக் கௌரவிப்பதற்காகவே சமீப காலமாக இந்தப் பரிசில்கள் வழங்கும் புதிய மரபு அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக எடுத்து விளக்கிய தலைவர். இது எமது இளம் போராளிகளுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிக்குமெனக் குறிப்பிட்டார். வேவுப்பணி [illegible] படைத்துறை சார்ந்த சில [illegible] அபார திறமையையும் துணிச்சலையும் வெளிப்படுத்தும் செயல்களுக்கும் போராளிகளுக்கு கௌரவப் பரிசு வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தலைவரின் உரையை அடுத்து போராளிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

பரிசு பெற்ற போராளிகளின் விவரம் வருமாறு:-

துணிகரமாகவும், திறமையாகவும் வேவு பார்த்து கண்ணிவெடியை வைத்த போராளிகள்: கார்வண்ணன் (பீற்றர்), வினோதன் செம்மனத்தான் (ஞானவன்), (வெற்றிச் செழியன் ஜெயா).

இவர்களுக்குப் பாதுகாப்பாகச் சென்ற போராளிகள்: அமுதன் [கபில்], கலையறிஞன் [ஜேசு], அழகன் (விசு) செங்கதிர், செங்கண்ணன் (பூவாசன்).

இந்தக் கண்ணிவெடியைக் கண்டுபிடித்து அறிமுகம் செய்தவர்: பிரதீப்.

தாக்குதலுக்குரிய இடத்தைத் திட்டமிட்டுக் கொடுத்த தீவகக் கோட்டச் சிறப்புப் பொறுப்பாளர்: கண்ணன்.

புல்லாவெளியில் இராணுவத்தினரின் சீன டாங்கி ஒன்றை ஆர். பி. ஜி. தாக்குதல் மூலம் முற்றாக நாசஞ் செய்தவர்: இளந்திரையன் (டார்வின்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொறிச் சில்லில் சிக்குண்டு கிளீனர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், செப். 14

இரண்டு லொறிகளுக்கிடையில் இடம்பெற்ற விபத்தொன்றில் சில்லுக்குள் சிக்குண்டு மரணமானதாகக் கூறப்படும் ஒருவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இவ்விபத்துச் சம்பவம் காங்கேசன்துறை வீதி — நாவலர் வீதி சந்திக்கு அண்மையில் நேற்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் புங்குடுதீவிலிருந்து இடம்பெயர்ந்து, யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் வசித்து வந்த சுப்பிரமணியம் கிருஷ்ணமூர்த்தி (வயது 25) என்ற லொறிக் கிளீனரே மரணமானவர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

சம்பவம் நடந்த இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு லொறியில் இருந்து பொருட்களை மாற்றி ஏற்றுவதற்காக, மற்றொரு லொறி பின்பக்கமாக வந்ததாகவும்—

அவ்வேளை நிறுத்தி வைக்கப்பட்ட லொறியுடன் அது மோதுண்டதில் நிறுத்தி வைக்கப்பட்ட லொறி முன்னோக்கி உருண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அப்போது நிறுத்திவைக்கப்பட்ட லொறியின் சில்லுக்குக் கட்டை வைப்பதற்காக சில்லுக்கு அருகில் இருந்த கிளீனர் உருண்ட லொறியின் சில்லுக்குள் நெரியுண்டு மரணமானார் என்று கூறப்பட்டது.


## வெற்றிக்கு வாழ்த்துக்கள்

யாழ் நகரில் முதன் முதலாக
சென்றலைட்ஸ் — ஜொனியன்ஸ்
அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம்
நடைபெற்று முடிந்த மூன்று நாள் கிரிக்கெட்
போட்டியில்
(10, 11, 12 — 09 — 1992)
வெற்றிவாகை சூடிய
"சென்றலைட்ஸ்"
விளையாட்டுக் கழக அணியினருக்கு
★ எமது வாழ்த்துக்கள். ★

(22543) — கிரிக்கெட் ரசிகர்கள்


## மரண அறிவித்தல்கள்

### முத்தையா பத்மநாதன்

(ஸ்ரீரங்கன் ரவலிஸ் கொழும்பு - 11)

நயினாதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு முத்தையா பத்மநாதன் 11-09-92 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற முத்தையா - ஞானேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், வரதலெட்சுமியின் அன்புக் கணவரும், ஸ்ரீரங்கன் (சுவிஸ்), ஸ்ரீராகவன் ஆகியோரின் அன்புத்தந்தையும், தம்பிராசா-அமராவதி தம்பதிகளின் மூத்த மருமகனும், மகாலிங்கம், சாந்தேசன், காலஞ்சென்ற செல்வராஜன், தருமராஜன், விமலராஜன், சரவணானந்தன், கலாவதி, நவனீதன், கலைச்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவராசா, ஸ்ரீவரதன், உருத்திரன், உதயேந்திரன், ராகலெட்சுமி, ராதாலெட்சுமி, ஜெயலெட்சுமி, அம்பிகாவதி, சோதிலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14-09-92) பிற்பகல் 3.00 மணிக்கு கொழும்பு மாதம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
6/10, 2 ஆவது ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
ச. ரேவதி (மாமியார்)
(22553)

### திருமதி மரியதாஸ் புருணோரஞ்ஜினி

கரம்பனை பிறப்பிடமாகவும், கிளிநொச்சி ஜெயந்தி நகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியதாஸ் புருணோரஞ்ஜினி 11-09-92 இல் காலமானார்.

இவர் றோபேட் மரியதாஸின் அன்பு மனைவியும், ஜெவின், கிசோக்குமார், மாவீரர் லதாயூலிஜஸ், ஜெயக்குமார், சஞ்சீவி ஆகியோரின் அன்புத் தாயாரும், யோசேப் பாக்கியநாதர் திரேசம்மாவின் அன்பு மகளும், கிறிஸ்ரி யோசேப் (அரச ஏற்றுமதி இறக்குமதி கூட்டுத்தாபனம், கொழும்பு), அன்ரனி (கோத்தணி அதிபர், நெடுந்தீவு), இம்மனுவல் (அபுதாபி), தோமஸ் (கப்பல்), யேமிஸ் சத்தியசீலன் (கனடா), திருமதி வசிந்தா மெதோடியஸ் (பப்பாய்), திருமதி மரிஸ்ரெலா மரியநாயகம், திருமதி மர்யமலர் தியாகராசா (சுகாதார திணைக்களம், வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் கிளிநொச்சியில் நடைபெறும்.

தகவல்:
36, 5 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
யோசேப் பாக்கியநாதர்
(22546)

# நள்ளிரவில் வட்டமிட்ட அவ்ரோ

தென்மராட்சி, செப். 14

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று கிளாலி, அல்லிப்பளை, பளைப் பகுதிகளின் மேல் பல தடவைகள் வட்டமிட்டுச் சென்றது.

இதனால் இப்பகுதிகளில் நள்ளிரவு வேளை பெரும் பதற்றம் நிலவியது. (உ-117)

# மீனவர் தாக்கப்பட்டார்

வடமராட்சி, செப். 14

வடமராட்சி சக்கோட்டைக் கடற்பரப்பில் நேற்றுக் காலை 7 மணியளவில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி ஸ்ரீலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

இதேசமயம் —

மூன்று மீனவர்களுடன் சென்ற படகு ஒன்றை நோக்கி கடற்படையினர் முன்னேறியதாகவும் -

அவ்வேளை படகில் இருந்த மீனவர்களில் இருவர் கடலில் பாய்ந்து தப்பிக் கொண்டதாகவும், மூன்றாவது மீனவர் படையினரிடம் அகப்பட்டுக் கொண்டதாகவும் தெரியவந்தது.

படையினரிடம் அகப்பட்ட கே. கலிங்கேஸ்வரன் (வயது 20) என்ற மீனவர் கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார்.

மீனவரின் வள்ளம் படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் சேதமடைந்தது. (உ-165)

# காங்கிரஸ், பாரதிய ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திரா காங்கிரஸ் கோரியுள்ளது.

ஜனதா தள் அரசு பதவியில் இருந்தபோது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக திரு. பழ. நெடுமாறன் ஏற்பாடு செய்த மாநாடு ஒன்றைத் தடை செய்த திரு. வி. பி. சிங்—

தமிழீழத்தை அங்கீகரிக்கும்படி கோரும் பாட்டாளி மக்கள் கட்சி மாநாட்டுடன் சம்பந்தப்பட்டிருப்பது குறித்து பாரதிய ஜனதா கட்சி மாநிலப் பிரிவு வியப்புத் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஜெ. லலிதா தமது சொந்தப் பாதுகாப்புக் குறித்து விடுதலைப் புலிகளுடன் இரகசிய இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பதால்—

புலிகளுக்கு ஆதரவான பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிராக எந்தவித நடவடிக்கையையும் எடுக்காமல் தவிர்த்து வருகிறார் என்று ஜனதாக்கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார். (உ-எ-10)

# செஞ்சிலுவை...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்கற்ற பற்றுச்சீட்டு — ஆகியன கணக்காய்வாளர் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தவறுகளில் சிலவாகும்.

1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துக்குரிய பிரஸ்தாப கணக்கறிக்கை கடந்த மார்ச் 29 ஆம் திகதி நடைபெற்ற சங்க நிர்வாகக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது என்றும்-

அச்சமயம் அக்கணக்கறிக்கை சரியாகத் தயாரிக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டு கணக்காய்வாளரின் அறிக்கையுடன் அதனை மீள சமர்ப்பிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தீர்மானத்துக்கு அமைய அக்கணக்கறிக்கையால் தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று மாதங்களுக்கான அறிக்கை ஒன்றை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உள்ளகக் கணக்காளர் தற்பொழுது தயாரித்துள்ளார்.

அவ்வறிக்கையிலேயே இவ் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (உ)

## தியாகி திலீபன் நினைவாக

# வடக்கில் பல இடங்களில் உண்ணாவிரத நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 14

தியாகி திலீபன் நினைவாக வட்ட மட்டத்தில் பல்வேறு இடங்களிலும் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றன.

லெப்டினன்ட் கேர்ணல் திலீபன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்த செப்டம்பர் 15ஆம் திகதி முதல் தமிழுக்காக தனது புகழுடலை நீத்த செப்டம்பர் 26 ஆம் திகதிக்கு முதல் நாளான 25 ஆம் திகதி வரை 12 நாட்களும் இந்த நினைவு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

நாளை முதல் ஒவ்வொரு நாளும் காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் உண்ணாவிரத நிகழ்வு மாலை 5 மணிக்கு முடிவு வைக்கப்படும். இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் வருமாறு:-

வலிகாமம்

★ சங்கானை — வழுக்கம்பரை அம்மன் கோயில்
★ யாழ்ப்பாணம் — ஐயனார் கோயிலடி
★ சண்டிலிப்பாய் — சுதுமலை அம்மன் கோயிலடி.
★ நல்லூர் — நல்லூர் கந்தசுவாமி கோயிலடி.
★ உடுவில் — சுன்னாகம் சிவன் கோயிலடி.
★ கோப்பாய் — நீர்வேலி கந்தசுவாமி கோயிலடி.

வடமராட்சி

★ பருத்தித்துறை — அல்வாய் முத்துமாரியம்மன் கோயிலடி.
★ கரவெட்டி — முத்து விநாயகர் கோயிலடி.

தென்மராட்சி

★ பளை — பெரியபளை தினேஷ் முகாம் முன்பாக.
★ கொடிகாமம் — ரயில் நிலையம் முன்பாக.
★ சாவகச்சேரி — நுணாவில் 190ஆம் கட்டையடி அருகாமை.
★ கைதடி — கைதடிச் சந்தி அருகாமை.

தீவக வட்டத்துக்குரிய நிகழ்வு நல்லூர் கந்தசுவாமி கோயிலடியில் இடம்பெறும். (உ-15)

# ஒரு தொகுதி அகதிகள் நேற்றும் திருமலைக்கு!

சென்னை, செப். 14

ஆயிரத்துக்கு அதிகமான இலங்கைத் தமிழ் அகதிகளைக் கொண்ட மற்றொரு தொகுதி தமிழ் நாட்டில் இருந்து 'நிக்கோபார்' கப்பல்மூலம் நேற்று திருகோணமலைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழக மறுவாழ்வு ஆணையாளர் சி. எம். இராம்தாஸ் நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

அகதிகளைத் திருப்பி அனுப்ப இப்போது கப்பல் கிடைத்திருப்பதால், வாடகைக்கு அமர்த்தப்படும் விமானங்கள் மூலம் அகதிகளை அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (உ-எ)

## கிளிவெட்டி குண்டுவெடிப்பு:

# டாங்கியுடன் சென்ற பாதை துண்டாக பிளந்து மூழ்கியது

சேருவிலவில் உள்ள பௌத்த விகாரைக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகப் போர் டாங்கி ஒன்றையும் எடுத்துக் கொண்டு சென்ற படையினரே கிளிவெட்டி படகுப்பாதைக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து படகுப்பாதை இரண்டாகப் பிளந்து போர் டாங்கியுடன் மூழ்கி விட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது தெரிந்ததே. (உ-எ)

## லலித் - காமினி இருவரையும்

# உயிரைப் பாதுகாக்குமாறு ஜே. ஆர். ஆலோசனை!

எதிர்வரும் நாட்களில் லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா போன்றோர் மிகவும் விழிப்புடன் இருந்து தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

—இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா சூசகமாக ஆலோசனை வெளியிட்டிருக்கிறார் என செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

சில தினங்களுக்கு முன் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த ஆலோசனையை வெளியிட்டதாக கொழும்பு பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

சில முன்னணி அரசியல்வாதிகள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று தமது உரையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா குறிப்பிட்டார் என்றும்—

அது லலித், காமினி ஆகியோருக்கு வழங்கப்பட்ட ஆலோசனையே என்றும் அப்பத்திரிகையாளர் மேலும் தெரிவித்தார். (உ-10)

# வடக்கே யுத்தம் புரிய வர தெற்கு இளைஞர் தயக்கம்

லண்டன், செப். 14

வடக்கு - கிழக்கில் முடிவுறாமல் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்துக்காக தங்கள் உயிரைக் கொடுக்க தென்னிலங்கை இளைஞர்கள் இப்போது தயாராக இல்லை. ஸ்ரீலங்கா அரச படையில் சேருவதற்கு அவர்கள் பின்னடிக்கிறார்கள்.

கொழும்புப் பத்திரிகையாளர் எல்மோ பெர்னான்டோ பி.பி.ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்துக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. ஆனால் போதியளவு இளைஞர்கள் இராணுவத்தில் சேர முன்வரவில்லை.

படைகளை விட்டு விலகி ஓடியவர்களை மீண்டும் சேர்த்துக் கொள்வதாக அரசு அறிவித்த போதிலும், அந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை — இப்படி அவர் மேலும் சொன்னார். (உ-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14-09-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org